
பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தரமானதே சிறந்தது என்றால்




சொலிட் பம்பையே வாங்குங்கள்

# உதயன்

விலை ரூ 2/-

When, only The best is Good Enough



Buy Solide Pumps

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஹு ஆனி மீ 20 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்தா பிறை 19 ( 04 - 07 - 1988 ) UTHAYAN- A lively Tamil Daily கதிர்: 122



சாலை இழந்து விட்டதால் தாம் எந்த வகையிலும் மற்றவர்களை விட பின்தள்ளப்பட்டவர்களோ அல்லது இயலாமை உடையவர்களோ, அல்லது திறமை குன்றியவர்களோ அல்லர் என்பதை ஜெய்ப்பூர்க் கால் பொருத்திய பல வயதினரும் கடந்த வெள்ளிக்கிழமை நிரூபித்தார்கள்.

அன்று நடைபெற்ற யாழ். ஜெய்ப்பூர்க் கால் தொழிற்சாலையின் ஓராண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்ட உதவி அரசாங்க அதிபர் திரு. பொ. பாலசிங்கம் உரை நிகழ்த்துவதையும், விளையாட்டுப் போட்டியின் போது பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். இவர்களில் பலரும் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள்.

[படங்கள்: ஜெயம்] (அ)

## இமையாணனில் இளைஞர்கள் கைது!

வடமராட்சி, ஜூலை 4

உடுப்பிட்டி, இமையாணன் பகுதியில் இளைஞர்கள் சிலர் அமைதிப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்றும், நேற்று முன் தினமும் அமைதிப்படையினர் ரோந்து சென்ற சமயம் இவர்கள் கைதாகினர்.

கைது செய்யப்பட்டவர்களில் க. பொ. த. சாதாரண பரீட்சை எடுக்கும் மாணவர்களும் அடங்குவர்.

இதனால் மாணவர்களின் பெற்றோர் கவலை அடைந்துள்ளார்கள்.

(ஒ-160)

# வடக்கு கிழக்கு இணைப்புப் பிரகடனத்தை வெளியிட இந்தியா வற்புறுத்து

## அடையாளமாகவேனும் ஆயுதம் ஒப்படைத்த பின்னரே அவ்வாறு செய்ய முடியும் என இலங்கை பிடிவாதம்

— கொழும்பிலிருந்து உதயன் சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, ஜூலை 4

வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைப்பதை அறிவிக்கும் ஜனாதிபதி பிரகடனத்தை உடனடியாக வெளியிடும்படி இந்திய அரசு, இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றது.

இந்தியத் தூதர் திரு. ஜே. என் டிக்ஸிற் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் தொடர்பு கொண்டு இந்திய அரசின் எண்ணத்தைத் தெரியப்படுத்தி இருப்பதாக, இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்னும் சில தினங்களுக்குள் ஜனாதிபதி பிரகடனம் வெளியிடப்பட வேண்டும் என்ற விருப்பத்தை இந்திய அரசு, ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு தெட்டத்தெளிவாகக் கூறிவிட்டதாக இந்தியத் தூதரகத்துடன் தொடர்புள்ள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதனிடையில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அடையாள பூர்வமாகவேனும் (Symbolic Gesture) ஆயுதங்களில் ஒரு பகுதியை ஒப்படைத்த பின்னர் தான் இரண்டு மாகாணங்களையும் இணைக்கும் ஜனாதிபதி பிரகடனம் வெளியிடப்படும் என்ற நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் எடுத்திருப்பதாகவும், அதில் விடாப்பிடியாக நிற்பதாகவும் அரசு வட்டாரங்கள் மூலம் தெரிய வந்தது.

எப்படியாயினும் வடக்கு-கிழக்கு இணைப்பு பிரகடனத்தை ஜனாதிபதி ஜெயவர்த்தன இன்னும் சில தினங்களில் வெளியிடும் நிலைக்குத் தள்ளப்படுவார் என்று இந்தியத் தூதரகத்துடன் தொடர்புடைய வட்டாரங்கள் உதயனுக்கு நம்பிக்கை தெரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. ஆரை கொலைசெய்ய மீண்டும் முயற்சி

கொழும்பு, ஜூலை 4

ஜனாதிபதி ஜெயவர்த்தனவை மீண்டும்கொலை செய்ய முயற்சி எடுக்கப்பட்டதாக கொழும்பு பொதுசனத் தொடர்பு சாதனங்கள் தெரிவித்ததாக ஏஜன்சிச் செய்திகள் நேற்றுஇரவு வெளியாகின. (ஒ-எ)

முச்சந்தி முரளி



ரெலிபோனும் வருகுது வருகுது எண்டு சொல்லுகினம். சரி வருகுதில்லையே!...

## தமிழ்ப் பகுதிகள் எங்கும் சொற்ப காலத்தில் அமைதி

### ஜே.ஆர். சொல்கிறார்

கொழும்பு ஜூலை 4

தமிழ்ப் பகுதிகளில் வடக்கு கிழக்கில்சொற்ப காலத்தில் அமைதியும் சமாதானமும் திரும்பி விடும் என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்திருக்கிறார்.

ஆனமடுவ என்னும் இடத்தில் நடந்த சம் உதாவ இறுதி நாள் நிகழ்ச்சியில் ஜனாதிபதி ஜெயவர்த்தன நேற்று கலந்து கொண்டு பேசினார்.

அவர் அப்போது சொன்னதாவது:-

ஜனாதிபதி பதவி, நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் ஆகியவற்றை நீடிக்க சர்வசன வாக்கெடுப்பு ஒன்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுப்படை தளபதியாக நளின்?

கொழும்பு, ஜூலை 4

இலங்கை ஆயுதப் படைகளின் கூட்டுப் படைத் தளபதியாக இராணுவத் தளபதி நளின் செனவிரத்ன நியமிக்கப்படுவார்என்று தெரிய வருகிறது.

அடுத்த மாதம் தற்போதைய கூட்டுப் படைத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்க ஓய்வு பெறுவார் என்று அறிவிக்கப்படுகிறது.

( ஒ-எ )

## செல்வம் தான் எமது செயலதிபரென ரெலோ அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4

செயலதிபர் செல்வம் எமது இயக்கத்தில் இருந்து வெளியேற்றப் பட்டார் என்ற செய்தியில் எதுவித உண்மையும் இல்லை.

இவ்வாறு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்திலிருந்து தளப்பொறுப்பாளர் திரு. இ. இளங்கோ வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில்

(6ஆம் பக்கம் பார்க்க)

## முதலமைச்சர் மகிந்தா கண்ணிவெடி தாக்குதலில் உயிர் தப்பினர்!

வடமத்திய மாகாண முதலமைச்சர் ஜி. டி. மஹிந்தசோம, நிலக் கண்ணி வெடித்தாக்குதலில் இருந்து உயிர் தப்பினர் என்று அறிவிக்கப்படுகிறது.

மரதன்கடவல - புஞ்சிகுளம் வீதியில் ஹபிதிய என்னுமிடத்தில் நேற்று முனதினம் காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

முதலமைச்சர் சென்ற கார் பலத்த சேதமடைந்தது.

நிலக்கண்ணி வெடித்த பின்னர் பற்றை மறைவில் இருந்து இனந் தெரியாதவர்கள் முதலமைச்சர் கோஷ்டியினர் மீது துப்பாக்கிப்பிரயோசம் செய்தனராம்.

கூடச்சென்ற பொலீஸார் திரும்பிச் சுடவே, அவர்கள் தப்பிச் சென்றனர் எனச் சொல்லப் பட்டது. (ஒ-எ)

## பல லைன்கள் கொண்ட "மைக்றோ வேவ்" தொலைபேசி வசதி

### யாழ். மாவட்டத்துக்கு விரைவில்?

கொழும்பு, ஜூலை 4

யாழ்.மாவட்டத்துக்கு விரைவில் பலநூறுலைன்கள் கொண்டமைக்றோ வேவ்தொலைபேசி பரிவர்த்தனைத்திட்டம் ஒன்றை இயங்கச்செய்வது குறித்து தொலைத் தொடர்பு திணைக்கள உயர் அதிகாரிகள் மட்டத்தில் பரிசிலனை செய்யப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

500 லைன்கள்கொண்ட பரிவர்த்தனை நிலையம் ஒன்றை செயற்படுத்துவது என்று கொழும்பு அதிகாரிகள் முன்னர் திட்டமிட்டிருந்தனர்.

வவுனியாவில் தற்போது செயற்படும் தொலைபேசி பரிவர்த்தனை அமைப்பு 1,000 லைன்களைக் கொண்டது. ஆனால் அதில் 200 லைன்கள் மட்டுமே பாவிக்கப் பட்டு வருகின்றன.

ஆகையினால் வவுனியாவில் செயற்படும் அமைப்பை யாழ்ப்பாணத்துக்கு மாற்றிவிட்டு யாழ்ப்பாணத்துக்கு ஒதுக்கு வதற்கு எனத் திட்டமிடப்பட்ட 500 லைன் அமைப்பை வவுனியாவுக்கு அனுப்பலாம்-

என்ற மாற்றுயோசனை ஒன்று தொலைத் தொடர்பு தலைமை அலுவலகத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

விரைவில் மாற்றுத் திட்டம் பற்றி கொழும்பில் பரிசிலனை செய்யப்படும் என்று அறிய வருகிறது.

இந்த யோசனைகளுக்கு அனுமதியளித்தால் இரண்டு, மூன்று மாதங்களில் இத்திட்டம்நடைமுறைக்கு வந்து விடும் என்று தெரிய வருகிறது.

உடன்பாடு அமுலுக்கு வரும் பட்சத்தில்

## யுத்த நிறுத்தமும் ஆயுத ஒப்படைப்பும் பகுதி பகுதியாக இடம்பெறும்?

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இந்திய அரசுக்கும்இடையே உடன்பாடு ஒன்று ஏற்பட்டு அமுலுக்கு வரும் பட்சத்தில் யுத்தநிறுத்த ... பும் பகுதி பகுதியாக இடம் பெறுவதையே இந்திய தரப்பினர்விரும்புகின்றனர்என்றுதெரிய வருகின்றது.

இந்திய தரப்பின்படி

( 6ஆம் பக்கம் பார்க்க )

## தேர்தல் ஆணையாளருக்கு பொலிஸ் அதிகாரம்

தேர்தல் ஆணையாளருக்குப் பொலீஸ் அதிகாரங்கள் வழங்க அரசுதீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

அண்மையில் நடந்த மாகாணசபைத்தேர்தல்களில் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஒழுங்கீனங்களைத் தொடர்ந்து. இந்த முடிவை அரசு எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## சுபநேரம்

04 - 07 - 1988

ஆனி 20

திங்கட்கிழமை

சுபநேரம்:
11-57 முதல் 1-27 வரை

ராகுகாலம்:
07-27 முதல் 08-57வரை

## புதுக்கடை திறப்புவிழா

அன்புடையீர்

நிகழும் விபவ வருஷம் ஆனி மாதம் 20 ஆம் திகதி (4-7-1988) இன்று திங்கட்கிழமை பகல் 10.21—12.03 மணியளவில் வரும் சுபவேளையில்

"யுனிரோன்" பிஸ்னஸ் என்ரர்பிறைஸ்

என்னும் மின்சார உபகரண வியாபார ஸ்தாபனத்தை நடாத்த இருப்பதால் தவ்வமயம் தாங்களும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்:

T. N. பாலபாஸ்கரன் (கோணேஸ்)

கே. கே. எஸ். வீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.

(5761)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சகல விதமான ரேடியோ T. V வீடியோ டெக் ஆகியவற்றின் உதிரிப்பாகங்களையும் (வீடியோ கெட் I. C டிரான்ஸ்சிஸ்டர் அன்ரனு பூஸ்டர்) ஆகியவற்றை மலிவான விலையிலும் நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள் R. V சென்ரர் F6. நவீன சந்தை மேல்மாடியில் யாழ்ப்பாணம். உரிமையாளர் விசு. (4732)

மிகவும் நல்ல நிலையிலுள்ள Kelvinator D/Door குளிர்சாதனப் பெட்டி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: Uni Services Engineers No 19 Aseervatham Lane, Jaffna. (5764)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் கட்டில் மெத்தைகள் கசற் றேடியோ சாப்பாட்டு மேசை கதிரைகள், அலுமாரி கடைசோகேஸ் கண்ணுடி மேசை கம்பளம், ஹோல் செற், விருந்தைக் கதிரைகள், ஸ்ரீல் அல்மாரி, தையல் மெசின் இரும்புத்தளபாடம் Baby Cot புத்தக அலுமாரி Imported Mattress மற்றும் பலவித பொருட்களும் மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம். சென்பற்றிக்ஸ் சந்தியருகில். [4588]

கொக்குவில் K.K.S. ரோட் குளப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் சகல வசதிகளும் கொண்ட காணியும், வீடும் (3½ பரப்பு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- செ. வேலாயுத பிள்ளை C/O மு. க. சின்னையா சட்டநாதர் ரோட் (அரசினர் விறகுகாலை முன் ஒழுங்கை) திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம். (4879)

டாலிபட்லர் அன் கொம்பனிக்கு சொந்தமான 1. Bed Hord Van (பெற்போர்ட்) 2. Sherpa Van (சேப்பா வான்கள்) விற்பனைக்குண்டு. திங்கள் (4. 7. 88) காலை 8 மணி தொடக்கம் 4 மணிவரை பார்வையிடலாம். சிற்றி ஏஜென்சி (City Agency) 158, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4878)

### காணவில்லை

திருமதி ம. சிவகுருநாதனின் சாரதி ''லைசென்ஸ்'', அவரின் காருக்குரிய pass (EN-7954) இன்சூரன்ஸ் பத்திரம், கார் லைசென்ஸ் ஆனைப்பந்தியடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: யாழ். உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (4873)

### அறிவித்தல்

கெருடாவில் தெற்கு சேர். பொன். இராமநாதன் இளைஞர் கழகம் தனது செயற்பாடுகள் அனைத்தையும் தற்காலிகமாக இடைநிறுத்தி உள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றது, தகவல்: நிர்வாகக்குழு. (4887)

### மீண்டும் வந்துவிட்டது

பூரணுதி லேகியம் தாதுபுஷ்டிலேகியம் மீண்டும் வந்துவிட்டது. தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம், 100 கொண்ட பைக்கட் விலை 45/- ரூபா 40/- கிடைக்கும்இடம் க.செ.கைலாசபிள்ளை அன் சன்ஸ் மருந்துக்கடை, 76, பெரிய கடை, யாழ்ப்பாணம். (C/5646)

### மணமகன் தேவை

யாழ்/ இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த 29 வயதுடைய அழகிய பெண் அரசாங்க மிருக வைத்தியருக்குமணமகன் தேவை. சீதனமாக வீடு வளவும்நகையும் கொடுக்கப்படும். மாற்றுச் சம்பந்தம் ஆகின் அவரின் சகோதரர் 27 வயது Accountant ஐ மணமகனுகப் பெறலாம். சாதகம் குறிப்புகளுடன் முழு விபரங்களோடு விண்ணப்பிக்கவும். விலாசம்: C/o 263 உதயன், யாழ்ப்பாணம். 4884

### சேவை

நாஷனல் JVC Akai வீடியோ டெக்கிற்கான மோட்டர், வீடியோ கெட் பெல்ற், ICகள் சகல ரெலிவிஷன்களில் Flybach ரியூனர் ரியூப் மற்றைய உதிரிப்பாகங்களும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். ஓடர்களுக்கு சிங்கப்பூரில் இருந்து பெற்றுக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு Jaffna Technical Institute Stanly Road [றெயில்வே கடவை அருகே] (C/5570)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna. Samy & Co Shabra அருகாமையில். (C5300)

### வகுப்புகள்

ஆண்டு 5, 6 புலமைப் பரிசிலுக்கான முன்னோடிப் பரீட்சை 9-07-88 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் 5-7-88க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். மொடேண் எடியுகேஷன் சென்ரர், கரவெட்டி. (4713)

பாடசாலை விட்டு விலகியோருக்கான பகுதி நேர பயிற்சி வகுப்புகள் ஹோட்டல் முகாமைத்துவம் துறையில் ஆரம்பமாகியுள்ளது. சேர விரும்புவோர் விண்ணப்பிக்கவும். தொடர்பு, அதிபர் இராமநாதன் கல்லூரி, சுன்னுகம், (4877)

### விற்பனைக்கு

சாவகச்சேரி பருத்தித்துறைவீதி பெருங்குளம் சந்திக்கருகில் மில் ஒன்று குத்தகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: N. மகேஸ்வரன், 3ஆம் ஒழுங்கை கற்குழி, சாவகச்சேரி. (5759)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பிறவுண் சேவற்குஞ்சுகள் 6ஆம் திகதி புதன் கிழமையும் புரொயிலர் குஞ்சுகள் (Broiler Chicks) 15ம் திகதி வெள்ளிக்கிழமையும் 16ம்திகதி சனிக்கிழமையும் விநியோகிக்கப்படும். பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி கொக்குவில். (4886)

### டீசல் கார் விற்பனை

நல்லநிலையில் உள்ள Morris Oxford டீசல் கார் விற்பனைக்கு உண்டு. காலை 7 முதல் 8வரை; மாலை 5 முதல் 6 மணிவரை பார்வையிடலாம். J. S, M. சாமுவேல், காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பளை. (4883)

### திருத்திக் கொடுக்கப்படும்

சகல விதமான றேடியோ, வீடியோ டெக், T. V. மின்விசிறிகள், மின் அடுப்புக்கள், மின்மோட்டர்கள், றைஸ்குக்கர், சுமீற், மொலிமெக்ஸ் கிரைண்டர்கள், எலக்ரோனிக் கல்குலேற்றர், சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள [illegible]கள். விக்டர் அன் [illegible]விக்ரேஸ்) 100 [illegible]தி, யாழ்ப் C/5594

### அறிவித்தல்

**84 SRI 5127 - HONDA C. 90**

2-7-88 காலை 9-00 மணி — 12-00மணிக்கு இடையில் யாழ். பிரதான வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் இருந்து காணுமல் போய்விட்டது. இதுபற்றி விபரம் அறிந்தோர் தயவு செய்து திரு. சி. ஜெயபாலன், கந்தசாமி கோவிலடி, நீர்வேலி தெற்கு என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (5775)

## வெற்றிடம்

**பணஞ்சேகரிப்பவர் / வாகனம் (Van) செலுத்துநர்**

வலிகாமம் மேற்கிலமைந்துள்ள உற்பத்தி நிறுவனமொன்றிற்கு தகுதியுடையோரிடமிருந்து மேற்படி வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரியிடமிருந்து பிணைப்பணம் எதிர்பார்க்கப்படும். நற்சாட்சிப்பத்திரங்கள் - கல்வித்தகைமைப் பத்திரங்கள் ஆகியவற்றின் பிரதிகளுடன் சிபார்சு செய்வோர் இருவரது பெயர்கள், விலாசங்களோடு விண்ணப்பங்களை இணைத்து 15-7-88 அன்றோ அதற்கு முன்னரோ எமக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

இல. 264, மே/பா உதயன்
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி 5647)

# S. P. ANTON

மகிழ்ச்சியுடன் வழங்கும்

## பிரயாண ஒழுங்குகள்

## ★ சவூதி அரேபியா

ஏயர்போட்
வைத்தியசாலை
என்பனவற்றுக்கு கிளீனர்ஸ் உடனடியாகத் தேவை.

* அனுபவம் உள்ள TAILORS (ஆண்கள்) டுபாய் நாட்டுக்கு உடனடியாகத் தேவை.

S. P. ANTON
114, Stanley Road,
(மக்கள் வங்கி முன்பாக)
JAFFNA.
(சி 5649)

## அறிவித்தல்

27-06-1988 ல் ''உதயன்'' பத்திரிகையில் திரு. கந்தையா குமாரசாமி என்பவர் மூளாய் மூத்த விநாயகர் (சித்திவிநாயகர்) கோவிலினைப் பற்றிப் பிரசுரித்த அறிவித்தலில் முத்துக்குமாரசுவாமி கோவிலுக்கு மாத்திரம் ஓர் இயக்குநர் சபையை உருவாக்குவதற்கு தாம் ஆட்சேபிக்கவில்லையென அறிவித்திருந்தார்.

குறித்த முத்துக்குமாரசாமி கோவிலுக்கு அதன் ஸ்தாபகர் மயில்வாகனம் நிற்சிங்க முதலியார்சின்னப்பா அவர்கள்எழுதிய தர்மசாதனவுறுதியின் பிரகாரம் அந்த வம்சாவழிவந்த திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் ஆகிய நான் தர்மகர்த்தாவும் முகாமையாளரும் ஆவேன். குறித்தகோவில் செவ்வனே நடாத்தப்பட்டு வருகிறது.

**திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன்**
(C 5633)

பெற்றோர்

## தமது அபிலாஷைகளை குழந்தைகள் மீது திணிக்கக்கூடாது

யாழ்ப்பாணம், ஜூலை.04

பெற்றோர் தங்கள் அபிலாஷைகளை குழந்தைகள் மீது திணிக்கக் கூடாது.

யாழ். கல்வித் திணைக்களப் பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளுக்குப் பிரதம அதிதியாக திரு. சோமசுந்தரம் கலந்து கொண்டு பேசுகையில் மேலும் சொன்னதாவது:

யாழ். மாணவர் அதிகாலையிலேயே புத்தகக் கல்வியைத் தொடங்குகின்றனர்.

முதலில் ரியூட்டரி, பின்னர் ஆறுமணித்தியாலங்கள் பாடசாலை, அதன் பின்னர் திரும்பவும் தனியார் கல்வி நிலையங்களில் நாள் முழுவதையும்மாணவர் செலவிடுகின்றனர்.

இந்த ஏட்டுக் கல்வியிலேதான் பெற்றோரும் நாட்டம் காட்டுகின்றனர்.

இத்துடன் நிற்காது இளஞ்சிறுர் உடல் உளவளர்ச்சி பெறத்தக்கதான வாய்ப்புக்களையும் பெற்றோர் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இப்படி திரு. சோமசுந்தரம் தெரிவித்தார்.

அதிபர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை போட்டிகளுக்குத் தலைமை வகித்தார்,

சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சிவநாயகமூர்த்தி, யாழ். இந்துக் கல்லூரி திரு. எஸ். பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாகலிங்கம் இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றது. காசிப்பிள்ளை இல்லம் இரண்டாம் இடத்தையும் பசுபதி இல்லம் மூன்றும் இடத்தையும் பிடித்தன-

திருமதி தையல்நாயகி சோமசுந்தரம் பரிசில்களை வழங்கினுர்- (இ-எ)

## நெடுந்தீவில் 8 வீடுகள்

நெடுந்தீவு, ஜூலை 4

பிரதமரின் சுய உதவி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நெடுந்தீவு பிரதேச சபைக்கு எட்டு வீடுகள் அமைக்கவென ரூபா 40 ஆயிரம் நிதியுதவி கிடைத்துள்ளது.

கிராம சேவை அலுவலர் பிரிவுக்கென இரண்டு வீடுகள் விதம் எட்டு வீடுகளை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (இ-111)

## தற்கொலை

யாழ்ப்பாணம், ஜூலை.4

வயிற்றுக் குத்துத் தாங்க முடியாத ஒருவர் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார்,

தி. முத்தையா (வயது 62) என்ற கோண்டாவிலைச் சேர்ந்தவரே இறந்தவர் ஆவார். (இ-10)

## சென்ஜேம்ஸ் அபி. சங்க கூட்டம்

குருநகர் சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரஸ்தாப பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். (இ)

## பண்டித வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை. 4

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் 02-07-88 சனிக்கிழமை முதல் பாலபண்டித, பண்டித வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன.

வகுப்புக்களிற் சேர விரும்பும் மாணவர்கள் நல்லை ஆதின மேலாளருடன் தொடர்பு கொண்டு தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளும் வண்ணம் வேண்டப்படுகின்றனர். (இ)

விற்பனையாகின்றது

## G. C. E. (A/L)

## அளவையியலும் விஞ்ஞானமுறையும்

[பகுதி II]

★ கடந்த 10 வருடகால வினுத்தாள்களை அடிப்படையாகக் கொண்ட பரீட்சைக் கால நூல்!

★ விடைவடிவில் அமைந்தது!!

★ இந்நூலுடன் இலவசமாக வழங்கப்படும் பின்இணைப்பு நூல்.

**'விஞ்ஞான கட்டுரைச் சுருக்கம்'**

ஆசிரியர் :

எஸ். எஸ். மனோகரன் (B.com)


கிடைக்குமிடம்:

**BECON கல்வி நிலையம்**

யாழ்ப்பாணம்.

(சி 5601)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**திரு. ஐயம்பிள்ளை - கனகசபை**
அவர்கள்

தோற்றம்: 10 - 11 - 1916 மறைவு: 15 - 06 - 1987

**திதி: 4 - 7 - 1938**

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து அன்புடன் ஆதரித்த எம் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு என்றும் அகலாது. உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இராசாவின் தோட்டம் வீதி.
யாழ்ப்பாணம். (5170)

# ஈழகுல மக்களே!

## உங்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி!

* எங்களூடாக கலர்ப் படப் பிரதியாக்கம் செய்யப்படும் பொழுது உங்கள் அபிமான பிரதி ஒன்று முற்றிலும் இலவசமாக 10x8 அங்குல அளவு ENLARGE செய்து கொடுக்கப்படும்.
* இலங்கையில் முன்னணியில் திகழும் FOTO COLOR LABORATORIES (CEYLON) LTD., உங்கள் நலன் கருதி எங்களை யாழ். மாவட்ட பிரதிநிதியாக நியமித்துள்ளார்கள்.
* உங்கள் மனத்திருப்திக்கு ஏற்ப மிகவும் அழகாகவும் தெளிவாகவும் கலர்ப்படப் பிரதிகள் GLOSSY / MATT தாள்களில் நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்து கொடுக்கப்படும்.
* **கலர் படச் சுருள்கள் கழுவுதல் முற்றிலும் இலவசம்!**
* ஒவ்வொரு பிரதிக்கும் அறவிடப்படும் கட்டணம்: **4 ரூபா 75 சதம் மட்டுமே !** உங்கள் படச் சுருள்கள் விமானம் மூலம் அனுப்பி மூன்று நாட்களுக்குள் கையாளப்படும்.

**Foto Color**
Laboratories (Ceylon) Ltd.
50, 1st Floor, Hyde Park Corner,
COLOMBO - 2.

**MACK TRAVELS**
8, First Lane, Point Pedro Road,
JAFFNA.
(C 5651)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் வைப்புப் பணத்துக்கு பாதகம் ஏற்படாமல் பாதுகாப்பு

## நிதி நிறுவனங்கள் சம்பந்தமாக மத்திய வங்கி கொண்டு வந்துள்ள கண்டிப்பான புதிய விதிமுறைகள்

யாழ்ப்பாணம், ஜூலை.4

நிதி நிறுவனங்களில், பொது மக்கள் இடும் வைப்புப்பணத்துக்கு எவ்வித பாதகமும் ஏற்படாமல் பாதுகாக்கும் வகையில் மத்திய வங்கி புதிய விதிமுறைகளைக் கொண்டு வந்துள்ளது.

பொதுமக்களின் வைப்புப் பணத்தை நிதி நிறுவனங்கள் துஷ்பிரயோகம் செய்யாது தடுத்து, பணப்பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் விதத்தில் கண்டிப்பான விதிமுறைகள் மத்திய வங்கியினால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

சரியான முறையில் நிர்வகிக்கப்படாமலோ அல்லது போதிய முதலீடு இல்லாமலோ பலவீனமடையும் நிதி நிறுவனங்களின் நிர்வாகத்தை மத்திய வங்கி பொறுப்பேற்றுக் கொண்டாலும் கூட, அந்த நிறுவனங்கள் தொடர்ந்து இயங்கி வாடிக்கையாளருக்கு வசதிகளைச் செய்யும் பொருட்டு, தான் கடன் உதவிகளைச் செய்யவிருக்கிறது. எனவே மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட நிதிநிறுவனத்தில் இடப்பட்ட, இடப்படும் வைப்புப் பணத்துக்கு இனி எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று உறுதியான நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

நிதி நிறுவனங்கள் சம்பந்தமாக கண்டிப்பான கட்டுப்பாடான விதிமுறைகள் போதிய அளவில் இதுவரை இல்லாததால் பல நிதி நிறுவனங்களில் பொது மக்கள் இட்ட வைப்புப் பணத்துக்குப் பாதகம் ஏற்பட்டது.

மிகச் சமீபத்தில் பிரபலமான நிதி நிறுவனம் ஒன்றின் செயற்பாடுகளில் அதிருப்தி கொண்ட மத்தியவங்கி அதன் செயற்பாடுகளை நிறுத்தி, பொதுமக்களின் வைப்புப் பணத்துக்குப் பாதுகாப்பு அளிக்க வல்லஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

நிதி நிறுவனங்களைக் கண்காணிக்கவும், தண்டிக்கவும் மத்திய வங்கிக்குப் பரந்த அளவிலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக கடந்த ஜூன் மாதம் பத்தாம்திகதி, பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிவித்தலின் பிரகாரம்–

நிதி நிறுவனங்கள். தமது கணக்கு மற்றும் விவரங்களை நாளுக்கு நாள் சரியாக வைத்திருக்க வேண்டும். அவற்றுக்கு விதிக்கப்பட்ட பணிப்புரைகளை மீறுமல் நடந்து கொள்ள வேண்டும். மத்திய வங்கியின் பணிப்புரைகளைச் சரிவரக் கடைப்பிடிக்காத நிதி நிறுவனங்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மத்தியவங்கி நிதிநிறுவனங்களுக்குப் புதிதாக வழங்கிய பணிப்புரைகளில் முக்கியமான சில விடயங்கள் வருமாறு:–

★ ஏற்கனவே பண வைப்புச் செய்த வாடிக்கையாளருக்கோ அல்லது எதிர்கால வாடிக்கையாளருக்கோ, பாதகம் ஏற்படும் விதத்தில் நடந்து கொள்வதாகச் சந்தேகிக்கப்படும் நிதி நிறுவனங்கள் குறித்து, அவற்றின் உண்மை நிலையை அறிவதற்குத் தேவைப்படும் சகல தகவல்களையும் தருமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் நிர்வாகத்தையோ அல்லது ஊழியரையோ கேட்கும் அதிகாரம் மத்திய வங்கிக்கு உண்டு.

★ நிதி நிறுவனம் ஒன்றின் பதிவேடுகள், ஏனைய கணக்குப் புத்தகங்கள் இதர தஸ்தாவேஜுகள் யாவற்றையும் நிர்வாகமோ அன்றி ஊழியரோ சமர்ப்பிக்க வேண்டுமெனக் கோர முடியும்.

★ மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட கணக்குப் பரிசோதகர் ஒருவர் பரிசோதிக்க வகை செய்யும் விதத்தில், நிதிநிறுவனத்தின் கணக்குகளைச் சமர்ப்பிக்குமாறு நிர்வாகத்தையோ அல்லது ஊழியரையோ பணிக்கும் அதிகாரம் உண்டு.

★ பொது மக்களின் நன்மை கருதி, நிதி நிறுவனம் இயங்குவதை இடை நிறுத்தி அதனைத் தற்காலிகமாக இயக்கக் கூடிய தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகளை நியமிக்கும் அதிகாரமும் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது.

நிதி நிறுவனம் ஒன்றின் முகாமைத்துவ சபையில் உள்ள இயக்குநர்களை நீக்கவும், வேறு இயக்குநர்களை நியமிக்கவும் மத்திய வங்கிக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

★ நிதி நிறுவனம் ஒன்றின் நிர்வாகத்தை மத்திய வங்கி பொறுப்பேற்ற பின்னர், அந்த நிறுவனம் உரிய முறையில் இயங்குவதற்குத் தேவைப்படும் கடன் மற்றும் வசதிகளைச் செய்து கொடுக்க ஒழுங்கு செய்யப்படும்.

★ மத்திய வங்கி சமர்ப்பிக்குமாறு கேட்கும் கணக்குப் புத்தகங்களையோ அன்றிப் பதிவேடுகளையோ வேறு ஆவணங்களையோ சமர்ப்பிக்கத் தவறும் நிர்வாகமோ அன்றி ஊழியரோ தண்டனைக்குரிய குற்றம் செய்தவராவார்.

★ மத்திய வங்கியின் மணிப்புரைகளை மீறும் நிதி நிறுவனங்களின் பெயர்களையும் முகவரிகளையும் பத்திரிகைகளில் பிரசுரிக்கவோ அன்றி இதர வெகு ஜனத்தொடர்பு சாதனங்கள் மூலம் வெளிப்படுத்தவோ மத்திய வங்கிக்கு உரிமை உண்டு.

★ நிதிநிறுவனத்தின் வங்குரோத்து நிலைக்குக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் எனக் கருதப்படும் இயக்குநர்கள், பங்குதாரர்கள், பங்காளர்கள், உரிமையாளர்கள், ஊழியர்கள், முகவர்கள் ஆகியோரின் பெயர்களையும் முகவரிகளையும் பகிரங்கப்படுத்தும் உரிமையும் மத்திய வங்கிக்கு உண்டு.

★ மேற்குறிப்பிடப்பட்டோரின் சொத்துக்கள் சம்பந்தமான தகவல்களை பொதுமக்களிடமிருந்து பெறுவதற்கும் மத்திய வங்கிக்கு உரிமை உண்டு.

★ மேலே குறிப்பிட்ட வகையினரின் உடைமைகளையும், சொத்துக்களையும் பறிமுதல் செய்யவும் மத்திய வங்கிக்குத் தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிதி நிறுவனங்களில் பணத்தை வைப்புச் செய்பவர்களைப் பாதுகாக்கவே மேற்படி கடுமையான பிரமாணங்கள் விதிமுறைகள் யாவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அரசு மத்திய வங்கிக்கு வழங்கியுள்ள அதிகாரங்களைத் தொடர்ந்து, பொதுமக்களின் வைப்புப் பணம் முழுவதையும், உரியவழியில் கவனமாகப் பாதுகாத்து, நிறுவனங்களை திறமையாக நிர்வகிப்பார்களென இப்பொழுது எதிர்பார்க்கப்படுகிறது.

இயங்க முடியாமலிருக்கும் நிதி நிறுவனங்களுக்கு, மத்திய வங்கி நிதியிலிருந்து கடன் வழங்குதல் போன்ற ஏற்பாடுகள் பலவும் வாடிக்கையாளர் மத்தியில் கூடுதலான நம்பிக்கையை ஏற்படுத்த ஏதுவாயிருக்கும். (அ–6)

---

### முதலாவது பிறந்ததின வாழ்த்து



★ செல்வன் மகேந்திரன் பிரசாத் ★

இணுவில் கிழக்கைச் சேர்ந்த மகேந்திரன் சசிகலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் செல்வன் பிரசாத் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று [4-7-88] திங்கட்கிழமை ஜெர்மனி இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார். அவரை அன்பு ஜெர்மன் அப்பா, ஜெர்மன் அம்மா, தாவடி அப்பப்பா, அப்பம்மா, இணுவில் அம்பப்பா, அம்மம்மா, ஜெர்மன் உதயன் மாமா, ஜெர்மன் சதீஸ் சித்தி, பிரான்ஸ் மோகன் மாமா, கொலன்ட் ஜெயம் சித்தப்பா, இணுவில் சாந்தி சித்தி, வதனி சித்தி, தாவடி குமார் சித்தப்பா, மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் எல்லோரும் பிரசாத்தை நல் அருள் பெற்று சகல செல்வங்களுடனும் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

இணுவில் கிழக்கு,
இணுவில்.

[4797]

---

## "வெறும் கோயில் வழிபாட்டுடன் சைவசமயம் நின்று விடக் கூடாது"

### 'ஆலயமணி' வெளியீட்டில் உரை

யாழ்ப்பாணம் ஜூலை 4

வெறும் கோயில் வழிபாட்டுடன் சைவசமயமானது நின்று விடக்கூடாது, மக்களை நல்வழிப்படுத்த, அவர்களின் நலன்களைப்பேண கல்வி, உணவு என்பனவற்றை மக்களுக்கு ஊட்ட எமது சமயம் பயன்பட வேண்டும்.

ஆலயமணி சஞ்சிகை வெளியீட்டு விழாவுக்கு தலைமை வகித்து உரையாற்றிய துர்க்கா துரந்தரி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு கூறினார்.

இந்த சஞ்சிகையின் வெளியீட்டுவிழா கடந்த வியாழக்கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவில் தங்கம்மா அப்பாக்குட்டி தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:.

மேற்கூறிய கருத்துக்களை புலப்படுத்தும் வகையில் இந்த சஞ்சிகை வெளிவர வேண்டும்.

அச்சம் நீங்க வேண்டும், அமைதி பொங்க வேண்டும். இந்நிலைமை வளர எம்மை வாழ வைக்க இந்நூல் உதவ வேண்டும். இப்படி அவர் கூறினார்.

[illegible] திருமுறை ஓதினர்.

திரு கனகசபாபதி நாகேஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

நல்லைஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களின் ஆசியுரையும் சபையில் வாசிக்கப்பட்டது.

திருவாளர் எஸ். தியாகராஜா ப. கதிரவேலு மல்லிகை ஆசிரியர் இலக்கியமாமணி டொமினிக் ஜீவா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்கள்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் முதற் பிரதியை வழங்கினர்.

சம்பன் கழக அமைப்பாளர் – செஞ்சொற் கொண்டல் – இ. ஜெயராஜ் "உறவுரை" செய்தார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், அதிபர் சி. சரவணபவன் (சிற்பி) ஆகியோர் ஆய்வுரை [illegible]

[illegible] ஆசிரியர் [illegible] சிவானந்தன் நன்றியுரை நல்கினர். (இ–க)

---


நீங்கள்விரும்பும் மதுரகான பாடல்களை
நவீன எலக்ரோனிக் ஈக்குவலைசர் மூலம்
(Modern Electronic Equalizer)
(ஸ்ரீறியோ முறையில் Stereo)
பதிவு செய்து கொள்ளவும்

● நாற்பதினாயிரத்திற்கு மேற்பட்ட மிகப்பழைய புதிய பாடல்களைத் தெரிவு செய்து கொள்ளவும்

நாடுங்கள்:

**விக்ரர் அன் சன்ஸ்**
(விக்ரேஸ்)
இல. 100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கிளைகள்:-

**விக்ரேஸ் மியூசிக் சென்ரர்**
இல. 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

**விக்ரர் அன் சன்ஸ்**
81, ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்.

(C 5603)


---

### பாடம் பயில்வோம் தமிழ் விடைத்தாள் இல: 1

சென்ற சஞ்சிகையில் பிரசுரமான 5 ஆம் வகுப்புப் புலமைப் பரிசில் தமிழ்மொழிப் பாட வினாக்களுக்கான விடைகள் இங்கு பிரசுரமாகின்றன.

(1) I விற்றெழில்
II பட்சணம்
III பதிகேறாரம் பாடம்
IV திருவுளச் சீட்டு
V தேர்ச்சி

(2) I முகம்
II வடித்தல்
III மரி
IV சிறப்புரை
V தாமரை

(3) I சோறு
II நீ
III களை
IV முதலாமாளாக
V உவமானம்

(4) (அ) 2
(ஆ) 4, 2, 5, 1.3.

(5) (அ) I எப்பொழுதும்
II வாடுதல்
III அருமை+ நவி
IV ஆத்தானமண்டபத்தில்
V பொருள் முடிப்பு
(ஆ) I பிழை
II சரி
III சரி
IV பிழை
(இ) I இனிய கவிதைகளைக் கேட்டு இன்புறவேண்டுமென்பது
II கொமணியின் அறிவும் ஆற்றலும்

(6) (அ) II
(ஆ) III
(இ) I
(ஈ) வெம்மை+ தழல்
(உ) பூமி
(ஊ) I
(எ) சமாதானம்.

---

## யுத்த அழைப்பு வரும் போது அனைவரும் தயாராக வேண்டும் இராணுவத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, ஜூலை.4

நாட்டைச் சூழ்ந்த யுத்த மேகங்கள் கலையத் தொடங்கி உள்ளன. ஆனால் யுத்த அழைப்பு வரும்போது அனைவரும் தயாராக இருக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி நளின் செனவிரத்தினபுதிதாகப்பயிற்சி பெற்று வெளியேறிய சிப்பாய்கள் மத்தியில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இராணுவத் தளபதி மேலும் பேசுகையில் "போருக்குத் தயாராக இருக்கும்படி நான் கூறுவதை வைத்து என்னை போர் வெறியன் என்று எண்ணி விடக்கூடாது.

யுத்தமுனை சென்றால் வெற்றிபெற்றே ஆக வேண்டும்.

சமாதானமே சிப்பாய்களின் இலட்சியம்" என்று சொன்னர். (ஒ–எ)

---

### வேலை பூர்த்தி பணம் சேரவில்லை

நெடுந்தீவு, ஜூலை 4

பொது நூலகம், கிழக்குப் பகுதியில் உள்ள வைத்தியசாலைக் கட்டடம் உட்பட வீதிகள் புனரமைப்புக்கென நெடுந்தீவு பிரதேச சபைக்கு கடந்த வருடம் ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி சுமார் ரூபா 86 ஆயிரம் இதுவரை வழங்கப்படவில்லை. குறிப்பிட்ட வேலைகள் பூர்த்தி அடைந்துள்ள போதிலும் அபிவிருத்தி நிதி இன்னமும் வந்து சேராததால் நடைபெற்று முடிந்த வேலைகளுக்கான கொடுப்பனவுகள் இடம்பெறவில்லையென அறியப்படுகின்றது. (இ 111)

### ஸ்தாபகர் தின விழா

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் தினவிழா இன்று திங்கட்கிழமை நடைபெற உள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மஸ்கன் சுப்பிரமணியம் ஞாபகார்த்த தொழில் நுட்பக் கூடத்தில் நடைபெறும் இவ் விழாவில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த டாக்டர் டி. குணராஜசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கல்லூரி அதிபர் திரு. மஹேசல்வலு தலைமையில் விழா நடைபெறும். கல்லூரி மாணவர்களின் வாத்தியக் கச்சேரி, பண்ணிசைக் கச்சேரி, சங்கீதக் கச்சேரி ஆகியவையும் இடம்பெறும். (க–90)

---


# விக்ஞ டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]
பிரிவு 4

O/L
DAY CLASSES [8. 30 – 1. 30]
EVENING CLASSES [2. 45 – 4. 45]
MORNING CLASSES [6. 15 - 7. 45]

ஆண்டு 10, 9, 8, 7. 6, ம் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
[காலை 6. 15 – 7. 45, மாலை 2. 45 – 4. 45]
புதிய வகுப்பு ஆரம்பம்: 13. 7. 1988

மு. குறிப்பு:-
I. எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு ஒருங்கிணைந்து போதிக்கப்படும் ஒரே நிறுவனம்.
II. கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.
III. மாணவர்கள் தரம் அறிந்து வகுப்புக்கள் பிரித்து நடாத்தப்படும்.
IV. G. C. E. [O/L] பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சைகள் இலவசமாக நடாத்தப்பட்டது தெரிந்ததே. இவ்வாறு ஒவ்வொரு வருடமும் பரீட்சைகள் நடாத்தப்படும்.

(C5609)



# கொம்பியூட்டர் பயிற்சி

| யாழ்நகரிலும்! | நெல்லியடி கிளையிலும்! | தெல்லிப்பளை கிளையிலும்! |
|---|---|---|
| 9. 07. 88 (Sat) (9. 30am) | 6. 07. 88 (Wed) (9. 30am) | 6.07.88 (Wed) (4. 00pm) |

**Diploma in Computer Programming Course** இற்கான சிறப்புப் பிரிவுகள் ஆரம்பமாகின்றன

| | | |
|---|---|---|
| ✶ Basic Programming | 1½ மாதம் | Rs 400/– |
| ✶ Advanced Basic (ஏற்கனவே வேறிடங்களில் Basic படித்தவர்களுக்கு மட்டும்) | 1 மாதம் | Rs 500/– |
| ✶ Cobol Programming | 2 மாதம் | Rs 500/– |

செய்முறைப் பயிற்சி IBM-PC SUPER / XT உட்பட பல Computer களில் அளிக்கப்பட்டு, IDP பரீட்சை முடிவில் வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் உடனடி வேலைவாய்ப்புக்களைப் பெறும் வகையில் தரமான அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**IDP**
INSTITUTE OF DATA PROCESSING

| | | |
|---|---|---|
| 342. K. K. S. Road, (சிவன் கோவிலடி) யாழ்ப்பாணம். | Modern Centre (அருகில்) நெல்லியடி. | K. K. S Road, (துர்க்கையம்மன் கோவிலடி) தெல்லிப்பளை. |

(சி–5628)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அமெரிக்கத் தீவில் உடனடி வேலை வாய்ப்புக்கள்

மேசன்மார் (Masons)
தச்சுத் தொழிலாளர் (Carpentors)
கட்டிட இரும்பு வளைப்போர் (Bar Benders)
தகுதியுடையோர் நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

எஸ். குலம்
பெரிய பளை,
பளை.

(5159)



பெருமையுடன் வழங்கும்

## மத்திய கிழக்கு வேலைவாய்ப்புக்கள்

**I. சவூதி அரேபியா:**

1. **Wheel Loader Operator** (வீல் லோடர் ஒப்பிறேட்டர்) 3 இடம் மட்டுமே
2. **Dump Track Operator** (டம்ப் டிறக் ஒப்பிறேட்டர்) 18 இடங்கள்
3. **Crane Operator** (கிறேன் ஒப்பிறேட்டர்) 3 இடங்கள்
4. **Bulldozer Operator** (புல்டோசர் ஒப்பிறேட்டர்) 3 இடங்கள்
5. **Cleaner's** (கிளீனேர்ஸ்) (அல்கோதாரிக் கம்பனி) 660 இடங்கள்

**II. Ready Mix Concrete Factory (Cement)** (திடீர் கலவை கொங்கிறீட் தொழிற்சாலை)

1. களஞ்சியப் பொறுப்பாளர் (Store keeper) 1 இடம்
2. விற்பனையாளர் (Salesman) 2 இடம் வாகன சாரதிப் பத்திரத்துடன்
3. Laboratory Technician 2 இடம் தொழில் நுட்பப் ஆய்வாளார் (சிமெந்தில் அனுபவம் உள்ளவர்கள்)

**III. Kuwait (குவைற்)** கிளீனேர்ஸ் (Cleaners)

**IV. பணிப்பெண்கள் (House Maids)**

செல்ல விரும்புவோர் கடவுச்சீட்டு, கடவுச்சிட்டு முன்பக்க பிரதி 10 படங்களுடன் தொடர்பு கொள்ளவும். பணிப் பெண்கள் முழுநீளப் படத்துடன் தொடர்பு கொள்ளவும்.

● கடவுச் சீட்டும் குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

நம்பிக்கை நாணயம் என்பவற்றுடன் பயணம் செய்ய இன்றே நாடுங்கள். உங்கள் தேவை எங்கள் சேவை

தொடர்பு கொள்ளுங்கள்:

**M 3 TRAVEL'S**

**T. இந்திரநாதன்**
கல்லூரி வீதி, சோநிலேன்,
காங்கேசன்துறை.

பஸ் வழி: 769, 763 764.

(சி 5598)


# தொழில் நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் வேண்டும்

## கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜுலை 4

அதிபர்களின் தலைமைத்துவப் பண்பில் தான் தொழில் நுட்பக் கல்வியின் வளர்ச்சி தங்கியுள்ளது. சில அதிபர்கள் தொழில் நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இதனை மாற்றி தொழில் நுட்பக் கல்விக்கு முதலிடம் அளிக்கவேண்டும் என்பதற்காகவே இன்று அதிபர்களுக்கு ஊக்குவிப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு வெ. சபாநாயகம் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற தொழில் நுட்பக் கல்வி அபிவிருத்தி ஆண்டு செய்திட்டங்களிலும் முறைசாராக் கல்விப் பிரிவுகளிலும் சிறப்பான பங்காற்றியவர்களுக்கு கல்விப் பணிப்பாளர் சான்றிதழ்கள் வழங்கிச் சிறப்புரையாற்றினார்.

முன்னதாக அவர் கல்விப்பணிமனையில் அமைக்கப்பட்டுள்ள தொழில் நுட்பப்பிரிவு ஒன்றைத் திறந்துவைத்தார்.

தொழில் நுட்பம் சம்பந்தமான உடை அமைத்தல், மனையியல், விவசாயம், வானொலி அமைத்தல், நெசவு போன்ற பாடங்களுக்கான கண்காட்சிக்கூடம் ஒன்றையும் அவர் திறந்துவைத்தார்.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் கல்வி அதிகாரி திரு. கு. புலேந்திரன் உட்பட கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், முறைசாராக் கல்வி ஆசிரியர்கள் தொழில் நுட்ப கல்வி ஆசிரியர்கள் பலரும் வைபவத்தில் கலந்துகொண்டனர்.

தொழில்நுட்பக் கல்வி அதிகாரி திரு. ச. சுப்பிரமணியம் வைபவத்துக்குத் தலைமை வகித்தார்.

கல்வி அதிகாரி திரு. சி. புலேந்திரனும் ஆசியுரை வழங்கினார்.

(இ-90-5)

## முன்னாள் பொலீஸ் அதிகாரி தலைவர்

மட்டக்களப்பு, ஜுலை. 4

மட்டக்களப்பில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலையானோர் புனர் வாழ்வுச்சங்கத்தின் தலைவராக முன்னாள் வாழைச்சேனை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஆர். தவராஜதீபன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி முகாம்களிலிருந்து விடுதலையான இளைஞர்-யுவதிகளை உள்ளடக்கிய இந்த அமைப்பு மாவட்ட ரீதியில் செயற்படும்.

(இ-21)


## வாகனம் விற்பனை

### கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் மூளாய்

மேற்படி வைத்தியசாலை சங்கத்திற்குச் சொந்தமான 30 Sri 3926 Toyota Hiace வாகனம் விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் வாகனத்தைப் பார்வையிட்டு எழுத்து மூலம் கேள்விப்பத்திரத்தை 15. 7. 88 ஆம் திகதிக்குமுன்பாக அனுப்பி வைக்கவும்.

மூளாய்.
1.7.87

தலைவர்
கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்

(C 5621)



தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகள் எடுக்கவும்; உங்கள் அடையாள அட்டைகளுக்கு, பிளாஸ்டிக்கவர் (Laminating) அமைக்கவும்.

**ஞானம்ஸ் ஸ்ருடியோ**
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C 5580)


## 10 ஆம் வருட நினைவஞ்சலி



**மில்றெட் புஷ்பறெட்ணம்**

மலர்வு: 22 - 10 - 1954 உதிர்வு: 04 - 07 - 1978

உறவும் பிரிவும் இணைபிரியாதவையாயினும்
உன் உறவின் பிணைப்பில் பிரிவு – ஒரு
தடையானாலும் உன் உறவின் நினைவு - எம்
நெஞ்சங்களில் என்றும் நிழலோடிக்
கொண்டே இருக்கும்.

பிரிவால் துயருறும்
**கணவன், மகள், பெற்றோர், சகோதரர், அண்ணிமார்.**

''புஷ்பறட்ண மகால்''
செம்பியன்பற்று.

(5166)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



செல்வி
**சித்திவிநாயகம் ஜெயபவானி**

மண்ணில்: 30-3-1963 விண்ணில்: 4-6-1988

அந்தியேட்டிக் கிரியை நடைபெறும் இன்றைய நன்னாளில் உமது ஆத்மா சாந்தியடையும் வண்ணம் சைவமும் தமிழும் ஒருங்கே தழைத் தோங்க இறை வழிபாடிட்ட செய்யாங்கள் அருள் பாலித்திட வேண்டி நிற்போம்.

இங்ஙனம்.
அப்பா, அம்மா, அண்ணா,
அக்கா, தம்பிமார், அத்தான்மார்,
தங்கை மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

(5776)


**ஹரன்** யாழ் நகர் – வெண்திரை

புதிய வெளியீடு! 10.30, 2 . 30

காட்சிக்குக் காட்சி
ஹவுஸ் புல்! ஹவுஸ் புல்!!



பாக்யராஜ்.. ராதிகா.. சேந்தில்

**பொய் சாட்சி**

- கலர் -

(5164)



## விளம்பர விபரம்

பிரதேச உற்பத்திப் பொருட்களுக்கான

### கூறுவிலை கோரல்

சபையின் கற்பகம் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்வதற்குத் தரமான பிரதேச உற்பத்திப் பொருட்களுக்குக் கூறுவிலை கோரப்படுகின்றது. கூறுவிலை பற்றிய முழு விபரத்தையும், விண்ணப்பப் படிவத்தையும் பெற்றுக்கொள்வதற்குச் சந்தைப் படுத்தும் உத்தியோகத்தர், சந்தைப்படுத்தும் பகுதி, இல. 53, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் 15-07-88 ஆம் திகதிக்குப் பிந்தாமல் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை

[சி 5634]



## விளம்பரம்

அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்தில் பாவிக்கப்பட்ட 18 கைத்தறி உபகரணங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. இந்த ஏலவிற்பனை எதிர்வரும் 09-7-88 சனிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு சங்கக் காரியாலய வளவில் நடைபெறும்.

—பொது முகாமையாளர்

[சி 5645]


## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் ஐயம்பிள்ளை அருணசலம்**

திதி: 4. 7. 1988

ஆலய மணிகள் அலறுதையா!
அருணாசலம் என்றே அழுகுதையா!
கோவிலின் தீபமும் அலையுதையா!
கொடியினை ஏற்றிட அழைக்குதையா!
தேரினின் முட்டியும் அழுகுதையா!
தேரினை இழுத்திட தேடுதையா!
காலமும் பன்னிரண்டானதையா! – நீங்கள்
கட்டிய கூடும் ஆடுதையா!
பாசங்கள் அதையும் அறியுதையா!
பா- அஞ்சலியில் வந்து இணையுமையா!
வேஷங்கள் இங்கே கலையுதையா! – அதில்
உங்கள் ஆத்மா சாந்தியடையட்டுமையா!

''அன்பகம்'' இராச வீதி, நல்லூர். மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(5774)

## முதலாவது நினைவு அஞ்சலி



தெல்லிப்பழை- வறுத்தலைவிளானைச் சேர்ந்த

**அமரர் தம்பிமுத்து தம்பித்துரை**

தோற்றம்: 2. 1. 1904 மறைவு: 15. 7. 1987

திதி: 4. 7. 1988

எமது குடும்பத்தலைவராக இருந்து எமக்கெல்லாம் நல்வழி காட்டிய அன்புப் பெரியீர்! தாங்கள் மறைந்து ஆண்டு ஒன்று ஆகிறது. தங்கள் மீது கொண்ட அன்பு பாசம் எம்மைவிட்டு ஒருபோதும் நீங்காது.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரர், பீட்டர், சகோதரர்கள்

வறுத்தலை விளான்
4-7-1988

[5153]


## BECON கல்வி நிலையம்

கலை, வர்த்தகம்

**A/L 89**

(ஒரு வருட வகுப்பு)
சனி, ஞாயிறு வகுப்புகள்

| | |
|---|---|
| பொருளியல்:- | வரதராஜன் |
| வர்த்தகம்:- | ரட்ணம் |
| கணக்கியல்:- | மரியதாஸ் |
| அளவையியல்:- | S. S. மனோகரன் |
| தமிழ்:- | மீரா |
| இந்து நாகரிகம்:- | ஜோதீஸ்வரன் |

ஆரம்பம்: 9-7-88
சனி 7. 00 a. m

**BECON**
156/3 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## முதுமாணிப் பரீட்சை-விஞ்ஞானம்

(MASTER OF SCIENCE EXAMINATION IN PLANT PATHOLOGY & HORTICULTURE)

மேற்படி பரீட்சை 1988 யூலை 18ஆம் திகதி ஆரம்பமாகிறது. பரீட்சார்த்திகள் விபரங்களுக்கு சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தேர்வுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

—பதிவாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும்.

**பொருள்:**

(அரசரை) எமக்கு இளையவர்; எமக்கு இன்ன முறை உடையவர்'' என்று இகழாமல் அவருடைய நிலைக்கு ஏற்றவாறு அமைந்த புகழுடன் பொருந்த நடக்க வேண்டும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22072

04-07-1988 த. பெ. இல 22


## புதுவாழ்வு வேண்டும்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, சிறைக் கூடங்களிலும், தடுப்பு முகாம்களிலும் வைக்கப்பட்ட தமிழ் இளைஞர்களில் 800 க்கு மேற்பட்டவர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை என்பது தெரிந்த விடயம்.

ஆனால் —

இலங்கை - இந்திய அமைதி ஒப்பந்தம் கைச்சாத்தான கையோடும், அதற்குப் பின்னர் கட்டம் கட்டமாகவும் விடுவிக்கப்பட்ட தமிழ் இளைஞர்களில் பலர் நிவாரணமும், புனர்வாழ்வும் இல்லாமல் நிர்க்கதிக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பது பலருக்குத் தெரியாத விடயம்.

விடுவிக்கப்பட்ட இளைஞர்களில் நோய் வாய்ப்பட்டு சிகிச்சையும், போதிய கவனிப்பும் இல்லாமல் கஷ்டப்படும் 80 வவுனியா இளைஞர்களின் அவல நிலையை இப்பத்தியில் ஏற்கனவே தெரிவித்திருந்தோம்.

ஒப்பந்தத்தின் பின்னர் விடுவிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான திருகோணமலைத் தமிழ் இளைஞர்கள் எவ்வித நிவாரண உதவியும் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்ற விடயம் இப்போது தெரியவந்திருக்கிறது.

தமக்கு எந்தவித நிவாரண உதவியும் வழங்கப்படாததை ஆட்சேபித்து நூற்றுக்கணக்கான இளைஞர்கள் திருகோணமலைக் கச்சேரி முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தி தமக்கு நேர்ந்தகதியைப் பகிரங்கமாக்கியுள்ளார்கள்.

பலத்த ஆயுதப் பாதுகாப்புடன் கூடிய திருமலைக் கோட்டைக்குள் அமைந்திருக்கும் கச்சேரியை 'முற்றுகையிட்டு' தமது குறைகளை அரசாங்க அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றனர்.

அந்த அகிம்சை முறைப் போராட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கும் விதத்தில், விடுவிக்கப்பட்ட இளைஞருக்குச் சில உடனடி நிவாரண உதவிகளை வழங்க அரசாங்க அதிபர் ஒப்புக் கொண்டார். அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகவும் உறுதி அளித்திருக்கிறார்.

தடுப்பு முகாம்களில் இருந்து இளைஞர்களை விடுவிப்பதோடு அரசாங்கம் தனது கடமை முடிந்துவிட்டதாகக் கருதக் கூடாது.

அவர்கள் மீண்டும் சமூகத்தின் ஓர் அங்கமாக இணைய வேண்டியவர்கள். ஒதுக்கி வைக்கப்பட வேண்டியவர்கள் அல்லர். அவர்களின் மறுவாழ்வுப் பொறுப்பு அரசாங்கத்தையே சார்ந்தது.

கைதாகி விடுவிக்கப்பட்ட இளைஞர்களுக்கு மறுவாழ்வு அளிக்க அரசு மறுக்குமானால் அல்லது பின் நிற்குமானால் அது அவர்கள் மீது வஞ்சம் தீர்க்க, பழிக்குப்பழி வாங்க முனைந்திருக்கிறது என்ற கருத்தையே பிரதிபலிக்கும்.

அது மட்டுமல்ல, விடுவிக்கப்பட்ட இளைஞர்களுக்கு, நிவாரணம், மறுவாழ்வு, வேலைவாய்ப்பு ஆகிய திட்டங்களை வகுத்துச் செயற்படுத்திப் புதுவாழ்வு அளிக்க அரசு தவறுமானால் —

இளைஞர்கள் விரக்தி அடைந்த நிலையில், வேண்டாத திசைகளுக்குத் திரும்ப இடம் கொடுத்ததாக முடியும். அரசாங்கமே வினையை வாங்கிக் கொண்டதாக முடியும்.

இளைஞர் சக்தியின் வலிமையை உணரத் தவறியதால், உதாசீனம் செய்ததால் தான் நாட்டில் இத்தனை அமைதி இன்மையும் அழிவும் ஏற்பட்டு வருகின்றன. வடக்கில் என்ன, தெற்கில் என்ன, இளைஞர் நலன் பேணப்படவேண்டும். அதனைக் கணக்கில் எடுக்கத் தவறினால் வேண்டாத விளைவுகளை எதிர் பார்த்தே ஆகவேண்டும்.

தமிழ் இளைஞர்கள் விடயத்தில் மட்டுமன்றி சிங்கள இளைஞர் விடயத்திலும் உதாசீனமாகவும் வீம்புத்தனத்துடனும் அரசு ஏற்கனவே நடக்க முயன்றதின் விளைவை, தாக்கத்தை அரசு இப்போது அனுபவித்து வருகிறது. இனிமேலாவது அந்தத் தவறை மீள்விக்காது இளைஞர் சக்திக்கு மதிப்பளித்து அவர்களுக்கு உள்ள பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்து வைக்கவேண்டும்.

இல்லையேல் அரசாங்கம் கஷ்டப்படுவதோடு மட்டுமன்றி மக்களும் பல இன்னல்களை அனுபவிக்கும் நிலை தொடரவே செய்யும்.

## கிளிநொச்சியில் தமிழ்ப்பாடம் இல்லை!

கிளிநொச்சிநகர பரீட்சை நிலையங்களில் கடந்த டிசம்பர் மாதம் நடைபெறுமல் தடைப்பட்டுப்போன தமிழ்ப் பாடப்பரீட்சை, விசேஷ பரீட்சையாக நடத்தப்படவில்லை.

தற்போது நடைபெறும் விசேஷ பரீட்சை மூலம் தடைப்பட்டுப் போன தமிழ் பாடமும் நடைபெற வேண்டுமென பெற்றோர்கள் கோரிக்கை விடுத்தும், எதிர்பார்த்தும் இருந்தார்கள்.

ஆனால் விசேஷ பரீட்சைக்கான தமிழ் பாடம் கிளிநொச்சியில் நடைபெருது ஏனைய இடங்களில் கடந்த சனிக்கிழமை நடைபெற்று விட்டது. (இ-144)

## மனித உரிமை பிரமுகர்கள் சுட்டுக் கொலை!

மணிலா, ஜூலை 3

மனித உரிமை இயக்கத்தைச் சேர்ந்த மூன்று வழக்கறிஞர்களை, வலதுசாரித் தீவிரவாதிகள் குழு ஒன்று சுட்டுக் கொன்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் இராணுவத்தில் உள்ள தீவிரவாதிகள் சிலரே இக் கொலைகளுக்குப் பின்னணியில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசின் மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியாத நிலை, இக் கொலைகளினால் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டன!

அக்ரா, ஜூலை 3

கானாவின் மூன்று பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டன என்று அறிவிக்கப்படுகிறது:

மாணவரின் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தே அரசு இந்த முடிவை எடுத்தது.

அரசின் கல்விச் சீர்திருத்தக் கொள்கைகளைக் கண்டித்தே மாணவர் எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

## ஜனதாவில் பிளவு!

பெங்களூர், ஜூலை 3

கர்நாடக ஜனதாக் கட்சியில் பிளவு தீவிரமடைந்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டேக்கு எதிரான கோஷ்டியின் தலைவரான தேவெஹௌடாவின் மாவட்ட ஜனதாக்கட்சிக்கிளை கலைக்கப்பட்டு விட்டது.

வெளி உலகில்

## 20 கோடி டாலர் மரியுவானா நடுக்கடலில் கைப்பற்றப்பட்டது!

வாஷிங்டன், ஜூலை 3

ஐம்பது தொன் மரியுவானா என்ற போதை வஸ்துவை அமெரிக்கக் கடற்படை அதிகாரிகள் கைப்பற்றினர் என்று அறிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலத்தில் இடம்பெற்ற மிகப் பெரிய போதை வேட்டை என்று இது வர்ணிக்கப்பட்டது.

வாஷிங்டனுக்கு அருகில் நடுக்கடலில் நங்கூரமிட்டிருந்த பனமாக் கப்பல் ஒன்றை முற்றுகையிட்டு மரியுவானாவைக் கைப்பற்றினர்.

அமெரிக்கக் கடற்படைக் ஹெலிக்கொப்டர், கப்பலை நோட்டமிடச் சென்றபோது அது வேறு திசைநோக்கிச் செல்ல ஆரம்பித்தது.

எச்சரிக்கைத் துப்பாக்கி வேட்டு தீர்க்கப்பட்டது

கைப்பற்றப்பட்ட போதைவஸ்துவின் சந்தைப் பெறுமதி 20 கோடி டாலர் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. (எ)

அலஹபாத் நகருக்குள்

## அமைச்சர்களை நுழையவிடோம்! புதிய எம்பி வி.பி.சிங் அறிவிப்பு!

அலகாபாத் ஜூலை 3

''உத்தர பிரதேச மாநில மந்திரிகளை அலகாபாத் நகருக்குள் நுழைய விடமாட்டோம்'' என்று அலகாபாத் தொகுதியில் வெற்றி பெற்ற வி. பி. சிங் கூறினார்.

அலகாபாத் தொகுதியில் போட்டியிட்டு, 1 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர்வி.பி. சிங்.

அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

'அலகாபாத் தொகுதி இடைத் தேர்தல் தேதி வெளியானதும், உத்தர பிரதேச முதல்மந்திரி பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்.

அதில் முக்கியமானது, அலகாபாத் நகர வளர்ச்சிக்காக ரூ. 80 கோடி அனுமதிக்கப்பட்டு இருப்பதாக தெரிவித்துள்ளார்.

அந்த அறிவிப்பின்படி அலகாபாத்பாராளுமன்றத் தொகுதி வளர்ச்சிக்காக ரூ. 80 கோடியை உடனடியாக செலவிட வேண்டும். பணம் ஒதுக்கப்பட்டு சில திட்டங்களுக்காக செலவிடப்பட்டும் உள்ளது.

அப்படி செய்யப்பட்ட பணத்துக்கும் அரசாங்கம் கணக்கு காட்ட வேண்டும். இல்லாவிட்டால் சும்மாவிட மாட்டோம்.

### நுழையவிடமாட்டோம்

ஏற்கனவே அறிவித்தபடி ரூ. 80 கோடியை உடனடியாக அலகாபாத் வளர்ச்சிப் பணிக்கு செலவு செய்ய வேண்டும்.

அதுவரையில் முதல்-மந்திரி உட்பட மற்ற மந்திரிகளையும், இ. காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களை அலகாபாத் நகருக்குள் நுழைய விடமாட்டோம். மீறி அலகாபாத் நகருக்குள் அவர்கள் நுழைந்தால் அவர்களைச் சுற்றி முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும்.''

இவ்வாறு வி. பி. சிங் கூறினார். (எ-4)

## பேர்லின் சுவர்

பெர்லின் ஜூலை 3

பெர்லின் சுவரை இதுவரை காலமும் கிழக்கு ஜேர்மனியர் தான் தாண்டி தப்பி வந்தனர்.

ஆனால் கடந்த வியாழன் பெர்லின் சுவரின் சரித்திரத்திலேயே முதல் தடவையாக மேற்கு ஜேர்மனியர் சிலர் சுவரைத் தாண்டி கிழக்கு ஜேர்மனிக்குள் சென்ற சம்பவம் இடம் பெற்றது.

சுவரின் மேற்கு ஜேர்மன் பக்கத்தில் சட்ட விரோதமாக குடியிருந்த பலரை வெளியேற்ற மேற்கு பெர்லின் பொலீஸார் நடவடிக்கை எடுத்தனர். அப்போதே அவர்கள் தப்பி கிழக்கு பெர்லினுக்குள் நுழைந்தனர்.

கிழக்கு ஜேர்மன் பொலீஸார் அவர்களுக்கு பிஸ்கட், குளிர்பானம் வழங்கி உபசரித்தனர் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

தமிழ் நாட்டில்:

## தேர்தலைச் சந்திக்க இ. காங்கிரஸ் தயார்

புதுடெல்லி ஜூலை 3

தமிழ்நாட்டில், தேர்தலைச் சந்திக்க இ. காங்கிரஸ் கட்சி தயாராக உள்ளது என்று இ. காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் ஜெகநாத் பகாடியா கூறினார்.

### சுற்றுப்பயணம்

பிரதமர் ராஜீவ் காந்தி சமீபத்தில் தமிழ் நாட்டின் சில பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்தார். அவருடன் அகில இந்திய இ. காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெகநாத் பகாடியாவும் சில பகுதிகளுக்கு சென்றார்.

டெல்லி திரும்பிய ஜெகநாத் பகாடியா நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் தமிழக தேர்தல் பற்றி கூறியதாவது:-

தமிழ்நாட்டில் தேர்தல் நடத்துவது குறித்து மாநில கவர்னரும், தலைமைத் தேர்தல்கமிஷனும் தான் முடிவு செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டில்இ. காங்கிரஸ் கட்சி ஒற்றுமையுடன் பலமுள்ளதாக இருக்கிறது. அங்கு தேர்தல் வந்தால் தேர்தலைச் சந்திக்க இ. காங்கிரஸ் தயாராக உள்ளது.

மேற்கண்டவாறு ஜெகநாத் பகாடியா கூறினார்.

### கர்நாடகம்

கர்நாடக மாநிலத்தில் இடைத் தேர்தல் வருமா என்று நிருபர்கள் அவரிடம் கேட்டனர், அதற்கு அவர் பதிலளிக்கையில் ''ஜனதா கட்சிதான் இதுபற்றி முடிவு செய்ய வேண்டும். ஆனால் கர்நாடகாவிலும் தேர்தலை சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்'' என்று கூறினார். (எ-4)

## வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்தோர் இன்று வெளியே நடமாடுகின்றனர்

யாழ்ப்பாணம் ஜூலை 4

வீட்டினுள் முடங்கிக் கிடக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டவர்களை நடமாடவைத்து குறுகிய காலத்தினுள் அரிய சேவைகள் செய்துள்ளது இந்தத் தொழிற்சாலை. இதனை ஆர்வத்துடன் இயக்கி வரும் அன்னையர் முன்னணியினரை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை.

ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலையின் ஓராண்டு பூர்த்தி விழாவின் காலை நிகழ்ச்சிகளுக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய சமூக சேவைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி கமலாதேவி சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கண்ணீர் மல்கக் கூறினார்.

திருமதி சிவசிதம்பரம் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி சமூக சேவை வேலைகளைக் கவனிப்பதற்காக சென்ற பொழுது வல்வெட்டித்துறையில் வைத்து மிதிவெடியினால் தனது காலின் ஒரு பகுதியை இழந்தவர்.

சுண்டுக்குளி ஜெய்ப்பூர் தொழிற்சாலையில் இடம் பெற்ற இந்த வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

இந்தத் தொழிற்சாலை எமக்கு உதவியது போல, கால்களை இழந்து பரிதவிக்கும் மக்களுக்கு இன்னும் உதவி புரிய வேண்டும்.

வெளிநாடுகளுக்குச் சென்று சிகிச்சை பெறுவது போல் இங்கு அதிக செலவும் ஆகாது.

தொழிற்சாலை மேன்மேலும் வளர வேண்டும் என்பது என்போன்றவர்களின் அவா.

இப்படி அவர் கூறினார்.

### ஜெய்ப்பூர் தொழிற்சாலையின் அளப்பரிய சேவைக்குப் பாராட்டு

செயற்கைக் கால் பாவனையாளருக்கான விளையாட்டுப் போட்டி பிற்பகல் நிகழ்ச்சியாக சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

பிற்பகல் நிகழ்ச்சிகளுக்குபிரதம அதிதியாகக் கலந்து கொண்ட உதவி அரச அதிபர் (காணி) திரு. ச. பொ. பாலசிங்கம் தமதுரையில் கூறியதாவது:-

செயற்கைக்கால் பொருத்தியவர்களே தொழிற்சாலையில் பணிபுரிந்து வருவதனால், அங்கு வருபவர்களை மிகுந்த அன்புடன் நடத்துகின்றனர்.

கால் பொருத்துவதுடன் கை பொருத்தும் பகுதியும் திறக்கப்பட வேண்டும். செயற்கைக் கால் பொருத்தும் நிலையம் இங்கு உண்டு என்பது ஏனைய தமிழ் மாவட்டங்களில் உள்ளவர்களுக்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும் - என்றார்.

திரு. பாலசிங்கமும் வல்வெட்டித்துறை சம்பவத்தில் தனது ஒரு காலை இழந்தவர் என்பது தெரிந்ததே.

விழாவுக்கு கொழும்பு நட்புறவுச் சங்க திட்ட முகாமையாளர் திருமதி சுவர்ணா பேடினன்ட் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பிரிட்டிஷ் தூதரகப் பிரதிநிதி திரு. [illegible] [illegible] ஜ. நா. அகதிகள் புனர்வாழ்வு ஸ்தானிகராலய அதிகாரி திரு. [illegible] போர்ட் ஆகியோரும் விழாவிற்கு தருகை தந்திருந்தனர்.

### நிதி கையளிப்பு

ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலைக்கான உதயன் - சஞ்சீவி உதவி நிதிக்குச் சேர்ந்த பணத்துக்கான 44, 066 ரூபா பெறுமதியான காசோலையை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்ஸ்தாபனத்தின் நிர்வாக இயக்குனர் திரு. ஈ. சரவணபவன் இந்த வைபவத்தில் வைத்து அன்னையர் முன்னணியின் பொருளாளரிடம் கையளித்தார். (இ-க)

## சிறப்பாக நடந்து முடிந்த சாவகச்சேரி துர்க்கைஅம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம்

சாவகச்சேரி, ஜூலை 4

சாவகச்சேரி அருள்மிகு துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் புதிதாக அமைத்துள்ள ஆலயங்களில் விநாயகர் சிவசுப்பிரமணியர், நவக்கிரகங்கள் ஆகிய பரிவாரமூர்த்திகளுக்கு மகா கும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தின் போதும் முதல் நாள் காலை முதல் மாலைவரை இடம்பெற்ற எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவத்தின் போதும் ஆயிரக்கணக்கான அடியார்கள் கூடியிருந்தனர்.

'சிவாகமஞான சாகரம்' சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் சிவஸ்ரீ க. பரராசசேகரக் குருக்கள், சிவஸ்ரீ செ. பரமானந்தக் குருக்கள் ஆகியோர் கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்தி வைத்தனர்.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. [illegible] [illegible] மணி, சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் ஆகியோர் உரைகள் வழங்க பிரம்மஸ்ரீ நடராசா அவர்கள் கும்பாபிஷேக மகிமை பற்றி உரையாற்றினார்.

ஆதீன தர்மகர்த்தா பிரம்மஸ்ரீ ப. மகா கணபதி சர்மா அவர்களின் நன்றியுரையை அடுத்து அன்னதானமும் இடம் பெற்றது. (இ-31)

## திருமலையில் மாணிக்கவாசகர் குருபூஜை

திருகோணமலை ஜூலை 4

மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூஜை அண்மையில் திருமலை மாரியம்மன் ஆலய தேவஸ்தானத்தில் நடைபெற்றது.

இந்து இளைஞர் பேரவையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தவிழா ஸ்ரீ சோமஸ்காந்தர் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

சைவப் புலவர், பண்டிதர் க. வடிவேலு திரு. க. சிவபாதசுந்தரம் ஆகியோர் உரையாற்றினர்.

சண்முக வித்தியாலய ஆசிரியைகள், மாணவிகள் திருவாசகப்பாடல்களைப் பாடினர். (இ-150)

கோமாரி நோய்:

## நாவற்குழி, தச்சன்தோப்பு பகுதிகளில் தடுப்பு ஊசி

சாவகச்சேரி, ஜூலை 1

கோமாரிநோய் அபாயகரமானது. தடை ஊசி போடுதல் மூலம் இந் நோய் வராமல் தடுக்கலாம். மாட்டுப் பண்ணையாளர்கள் தங்களின் எல்லா மாடுகளுக்கும் தடை ஊசி போடுவது மிகவும் அவசியமானது.

சாவகச்சேரி அரச கால்நடை மருத்துவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஊசி போடும் விவரங்களையும் அவர் அறிவித்துள்ளார்.

நாளை 5 ஆம் திகதி நாவற்குழி கத்தோலிக்க தேவாலய வளவிலும் 6 ஆம் திகதி தச்சன் தோப்புக் கிராம சபையிலும், 8 ஆம் திகதி கோயிலாக்கண்டி மத்தியிலும் காலை 6. 30 மணி முதல் 9. 00 மணி வரை ஊசி போடப்படும்.

மறவன்புலவு, தனங்கிளப்பு பகுதிகளுக்கு ஊசி போடும் திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும். (இ-31)

ஜீ.சி.ஈ.பரீட்சை:

## மாற்றம் இருந்தால் திருத்தம் செய்யலாம்

யாழ்ப்பாணம் ஜூலை 4

''விசேஷ ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களின் பிரவேசக் கார்ட்டுகளில் கவின் கலைப்பாடம், தொழில் முன்னிலைப் பாடம்எனபவற்றில் விண்ணப்பித்ததுக்கு மாறாக ஏதாவது மாற்றங்கள் இருந்தால் பரீட்சை மண்டப மேற்பார்வையாளருடன் தொடர்பு கொண்டு திருத்தங்களைச் செய்யலாம்.''

இவ்வாறு கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் உதயனிடம் தெரிவித்தார்.

-பரீட்சார்த்திகள் சிலரின் பிரவேசக் கார்ட்டுகளில் அவர்கள் விண்ணப்பித்த தொழில்முன்நிலைப் பாடத்திற்குப் பதிலாக வேறு ஒரு பாடம் பிரவேசக் கார்ட்டில் குறிப்பிடப்பட்டிருப்பதாக மாணவர்கள் முறையிட்டுள்ளார்கள் என்றும் அவர் கூறினார்.

## கும்பாபிஷேகமும் கொடியேற்றமும்

மண்டைதீவு ஜூலை 4

மண்டைதீவு முகப்புவயல் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகோவில் பிராயச்சித்த யாக கும்பாபிஷேகமும், கொடியேற்ற வைபவமும் இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

தொடர்ந்து 11 தினங்களுக்கு நடைபெறும் இந்த வருடாந்த உற்சவத்தின் தேர்த்திருவிழா 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் தீர்த்தோற்சவம் 13ஆம்திகதி புதன் கிழமையும் நடைபெறவுள்ளன. (இ-சி)

## 10 மாணவரின் பெயர்கள் சிபார்சு

செவன சரண உதவித் திட்டத்தின் கீழ் வசதி குறைந்த மாணவருக்கு கல்வி கற்பதற்கென நிதியுதவிகள் கிடைக்கவுள்ளன.

இதற்கென பத்து மாணவர்களின் பெயர்களை நெடுந்தீவு பிரதேச சபை சிபார்சு செய்துள்ளது. (இ-111)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நன்றி சர்பத்

இது நரம்புத் தளர்ச்சி, சலக்கடுப்பு,
மூலவியாதி போன்ற உஷ்ண வியாதிகளைப்
போக்கித் தாகசாந்தி தருகிறது.

**1 போத்தல் விலை: ரூபா 25/-**

கிடைக்குமிடம்:

**க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**

இல. 5 (76), பெரியகடை,
யாழ்ப்பாணம்.



# உதயன்

04 - 07 1988 திங்கட்கிழமை



## புஸ்பா நெல்லி ரசம்

விட்டமின் 'சி' சத்து நிரம்பியது:
தாகசாந்தி, பித்தம், ஓங்காளம்
இவற்றை நிவர்த்தி செய்து
இரத்தத்தைச் சுத்தி செய்கிறது.

**1 போத்தல் விலை: ரூபா 25/-**

கிடைக்குமிடம்:

**க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**

இல. 5 (76), பெரியகடை,
யாழ்ப்பாணம்.


# எயர் பஸ் மீது அமெ. ஏவுகணை தாக்கு!
## 290 பயணிகள் பலி!!

தெஹ்ரான், ஜூலை 4

வளைகுடாவில் ஈரானின் எயர்பஸ் விமானம் ஒன்று அமெரிக்கப் போர்க் கப்பலில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணையால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

விமானத்தில் இருந்த 290 பயணிகளும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஹொர்மூஸ் நீரிணையில் விமானம் நொருங்கி வீழ்ந்தது. சுமார் நூறுபேரின் சடலங்கள் சிதைந்த நிலையில் மீட்கப்பட்டன என்று ஈரான் அதிகாரிகள் அறிவித்தனர்.

தெஹ்ரான் விமான நிலையத்தில் இருந்து இவ்விமானம் நேற்றுக்காலை (கிறீன்விச் நேரப்படி) 6-45 மணியளவில் டுபாய் நோக்கிப் புறப்பட்டது.

ஏழு நிமிடங்களில் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. பின்னர் ராடரில் விமானம் தெரியவில்லை. (ஒ-எ)

# கந்தசாமியை விடுவிக்க கோருகிறார் ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 4

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் ஸ்தாபக உறுப்பினரான திரு. கே. கந்தசாமியைஉடன் விடுவித்து உதவுமாறு யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

திரு. கந்தசாமி தமிழ் மக்களது புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஏதோ ஒருவகையில் தாம் சரியென்று கருதிய முறையில் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக செயற்பட்டு வந்தவர். அவரது நடவடிக்கை சில சமயங்களில் சர்ச்சைக்குரியதாக இருந்தாலோ அல்லது அவரைக் கடத்தியவர்கள் அப்படி எண்ணிய காரணத்தினாலோ அவர் கடத்தப்பட்டிருக்கலாம்.

ஆயினும் அவர் கடத்தப்பட்டமை சம்பந்தமாக தமிழ் மக்களுடைய புனர்வாழ்வு மற்றும் நலன்களைப் பாதிக்கக்கூடிய வகையிலான நிலைமை தோற்றுவிக்கப்படுவதால் அவரைக் கடத்தியவர்கள், அவரில் கண்ட குறைபாடு எதுவாக இருந்தாலும் அவற்றை தமிழ் இனத்தின் மேலான அக்கறைகளையும், நலன்களையும் கருத்திற்கொண்டு அவரை உடனடியாக விடுவிக்குமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டிக்கொள்கின்றேன்.

இவ்வாறு திரு. சிவஞானம் தமது அறிக்கையில் கேட்டுள்ளார். (அ - ஒ)

## தமிழ்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்படாத பட்சத்தில், ஜனாதிபதித் தேர்தலும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலும் இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்தப்படும்.

நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டு ஆகஸ்டுக்கு முன்னர் நடத்தப்படவேண்டும். அரசு விரும்பினால் அதற்கு முன்னரும் நடத்தலாம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்னும் சொற்பகாலத்தில் அமைதியும் சமாதானமும் திரும்பி விடும். இப்படி ஜனாதிபதி தெரிவித்தார். (அ-எ)


# NEW MASTER INSTITUTE
B. M. C. LANE, JAFFNA.

## 90 A/L
### WEEKEND CLASSES

| | |
|---|---|
| Chemistry | - 7-30 a.m. |
| Physics | - 8-30 a.m. |
| Botany | - 9-30 a.m. |
| Zoology | - 10-30 a.m. |
| Pure Maths | - 9-30 a.m. |
| Applied ,, | - 10-30 a.m. |

(எமது வழமையான ஆசிரியர் குழு)

ஆரம்பம்:

**10-07-88 Sunday**

(C 5655)


உடன்பாட்டுக்கு சட்ட அந்தஸ்து:

# முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி இந்திய அரசுடன் பேசும்

கொழும்பு, ஜூலை 4

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின் போது உடன்பாடு காணப்பட்ட அம்சங்களுக்கு சட்ட அந்தஸ்து பெற்றுக் கொடுப்பதற்காக இந்திய அரசுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்த முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் விடுதலை கூட்டணித் தலைவர்களின் உதவியை இது விஷயத்தில் முஸ்லிம் ஐக்கிய முன்னணித் தலைவர்கள் நாடியிருக்கின்றனர் என்று அறியப்படுகின்றது.

சென்னை திரும்பிய பின்னர் இந்திய மத்திய அரசு அதிகாரிகளுடன் இது விஷயமாக கூட்டணித் தலைவர்கள் பேசவிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

## கிராவ் சாம்பியன்

விம்பிள்ரன் ரெனிஸ் பெண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் ஸ்ரெபி கிராவ் சாம்பியனானார்.

விம்பிள்ரனில் சாதனை புரிந்த மார்ட்டீனா நவர்ட்டிலோவாவை இவர் இறுதிப்போட்டியில் தோற்கடித்தார். (ஒ-க)

## யுத்த...

ஆயுதங்கள் அந்தந்தப் பகுதி அமைதிப்படை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் அப்படி ஆயுதங்கள் ஒப்படைக்சப்படும் பகுதிகளில் யுத்த நிறுத்தம் அனுஷ்டிக்கப் படுமாம்.

இப்படி பகுதி பகுதியாக யுத்த நிறுத்தம் கடைப் பிடிக்கப்படுவது முழு யுத்த நிறுத்தம் வரும் வரை நீடிக்கும் என்று இந்தியத்தரப்பில் கூறப்படுகின்றது.

இது நான்கு வாரங்கள் நீடிக்கும் என்றும் அக்காலத்தில் 700 ஆயுதங்கள் ஒப்படைக்கப்படும் என்றும் தெரிகிறது.

ஆனால் தொடர்ந்து ஐந்து தினங்கள் யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அக்காலத்தில் ஆயுதங்கள் முழுமையாக ஒப்படைக்கப்படும் என்றும்தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தெரிவிக்கின்றது என அறிய வருகிறது. (ஒ-எ)

## இணைப்பு....

வித்தன.

வடக்கு, கிழக்கு மாகாணசபை அமைத்தல் அம் மாகாணசபைக்கான தேர்தல் ஆகியவை தொடர்பாக ஜனாதிபதியின் அலுவலகம் கடந்த புதன்கிழமை விடுத்த அறிவிப்பை ஜனாதிபதியின் பிரகடனமாக ஏற்றுக் கொள்ள முடியாது என இந்தியத் தூதரக வட்டாரங்கள் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தியிருப்பதாகவும் அதே வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஜனாதிபதி அலுவலக அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், இணைப்புச் சம்பந்தமாக ஜனாதிபதி பிரகடனம் ஒன்றை வெளியிட்டால் மட்டுமே இணைப்பு நடைமுறைக்கு வந்ததாகக் கருத முடியும், அதுவே தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தும் என்றும், தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. கிட்டு கடந்த வெள்ளிக்கிழமை சென்னையில் செய்தியாளர் மத்தியில் அறிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்தே இந்தியா ஜனாதிபதி பிரகடனத்தின் அவசியத்தை இலங்கை அரசிடம் வலியுறுத்தத் தொடங்கியுள்ளது. (அ-உ-எ)

# கரணவாயில் துப்பாக்கிக் கொள்ளையர் நடத்திய நாடகம்!

வடமராட்சி, ஜூலை 4

கரணவாய் தெற்கிலுள்ள ஒருவீட்டில் புகுந்த முகமூடி அணிந்த துப்பாக்கிக் கொள்ளையர்கள், நகைகளையும் பணத்தையும் அபகரித்துச் சென்றனர்.

கரணவாய் தெற்கு செல்வந் தோட்டத்தில் கடந்த சனிக்கிழமை இரவு 8 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

கொள்ளையர்கள் தம்மைப் போராளிகள் எனவும் தம்மை அமைதிப் படையினர் துரத்தி வருவதாகவும் கூறியபடியே பலாத்காரமாக வீட்டில் புகுந்து மின் விளக்குகளை அணைத்தனராம்.

பின் சுட்டு விடுவோம் எனத் துப்பாக்கியைத் தூக்கிப்பிடித்தவண்ணம் பிரதான அறையினுள் சென்று பதினையாயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்தார்களாம்.

அப்போது கொள்ளையர்களுக்கும் வீட்டாருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் பெரும் சத்தமாகக் கேட்கவே கொள்ளையர்கள் கொள்ளைப் பொருள்களுடன் வெளியே ஓட எத்தனித்தனர். அவ்வேளை ஒருவரை வீட்டுக்காரர் கைப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டார். அதனைத் தொடர்ந்து ஏனைய கொள்ளையர்கள் வானத்தை நோக்கிச் சுட்டனராம்.

மேற்படி துப்பாக்கிப் பிரயோகத்தைத் தொடர்ந்து பிடிபட்ட கொள்ளையரும் தப்பித்துச் சென்று விட்டாராம்.

மறுநாள் காலை சம்பவம் நடந்த இடத்துக்கு வந்த அமைதிப் படையினர் விசாரணை செய்ததுடன் கொள்ளையர்களால் பயன்படுத்தப்பட்ட வெற்றுத் தோட்டாக்களையும் எடுத்துச் சென்றதாகக் கூறப்பட்டது. (ஒ - 160)

# தணிக்கை செய்து படங்களைக் காட்ட
## மினிசினிமாச் சங்கம் முயற்சி

யாழ். மாவட்டத்தில் உள்ள மினி சினிமாக்களில், படங்கள் திரையிடப்படும் பட்சத்தில் அவை தணிக்கை செய்யப்பட்ட பின்னரே திரையிட அனுமதிக்கப்படும்,

இதற்கென தணிக்கை சபை ஒன்று யாழ். மாவட்ட மினிசினிமா சங்கத்தினரால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று மேற்படி சங்கத்தின் தலைமைக் காரியாலயமான உஷா மினி சினிமாவில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கூட்டத்தின் இறுதியில் சங்கத் தலைவர் திரு. செ. வசிகரநாதன், செயலாளர் திரு. மு. செல்வநாயகம் ஆகியோர் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ள நிலைமையைப் பயன்படுத்தி ஒருசில மினிசினிமா உரிமையாளர்கள் நமது கலாசாரத்தைச் சீரழிக்கும் வகையிலான திரைப்படங்களைத் திரையிட்டனர் என்பது சரிதான். அதன் காரணமாகவே மினிசினிமாக்களுக்குயாழ். மாவட்டத்தில் தடை விதிக்கப்பட்டது.

இதனால் இந்தத் தொழிலையே நம்பியிருக்கும் நூற்றுக்குமேற்பட்ட உரிமையாளர்களும், ஊழியர்களும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றனர்.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு இந்த மினிசினிமாச் சங்கம் உருவாக்கப்பட்டதுடன், மீண்டும் மினி சினிமாக்களை யாழ். மாவட்டத்தில் இயங்க வைக்கஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

இதனடிப்படையில் மினிசினிமாக்களில் திரையிடப்படும் அனைத்து திரைப்படங்களும் எமது சங்கத்தின் தணிக்கைப் பிரிவினரால் தணிக்கை செய்யப்பட்ட பின்பே திரையிட அனுமதிக்கப்படும்.

தணிக்கை செய்யப்படாத, தடை செய்யப்பட்டதிரைப்படங்களைத் திரையிடுதல் போன்றவை கண்காணிக்கப்பட்டு அவ்வாறான மினி சினிமாக்களின் அனுமதிப் பத்திரம் பறிமுதல் செய்யப்படுவதுடன் உரிய கண்டனையும் வழங்கப்படும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். (ஒ-9)

## நிதி உதவி

யாழ்ப்பாணம், ஜூலை. 4

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வன்செயல்களினால் இறந்த 100 பேரின் குடும்பங்கள்ஒவ்வொன்றிற்கும் நேற்று தலா ஆயிரம் ரூபாவீதம் வழங்கப்பட்டது.

யாழ். மாநகராட்சி மன்ற ஊழியர் நிவாரண நிதியில் இருந்தே இந்தத் தொகை வழங்கப்பட்டது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி.வீ. கே. சிவஞானம் இந்த தொகையை உரியவர்களிடம் கையளித்தார்.

## செல்வம்.....:

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:—

எத்தனையோ இடர்களுக்கு மத்தியில் எமது இயக்கம் உண்மையான போராளிகளின் ஒத்துழைப்போடு செயலதிபர் திரு. அ. செல்வத்தின் வழி நடத்தலில் திறம்பட செயற்பட்டு வருகிறது.

இவ்வேளையில் இந்தியாவிலிருந்து கந்தா என்பவர் செயலதிபர் செல்வம் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார் என்று பத்திரிகைகளுக்கு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இவ்வறிக்கை விட்ட இந்த கந்தா யார்? எமது முன்னைய தலைவர் ஸ்ரீ சபாரத்தினத்தின் சகோதரர் என்ற உறவைத் தவிர கந்தா என்று அழைக்கப்படும் இந்த கந்தசாமிக்கும் எமது இயக்கத்துக்கும் வேறு எந்தவித தொடர்பும் தற்போது இல்லை.

அந்தக் கந்தா வெளியிட்டிருக்கும் அறிக்கை எமக்கு வேதனையையும் அதிர்ச்சியையும் தருகின்றது. தமிழ் நாட்டில் எமது இயக்கத்தின் பொறுப்பாளராகச் செயற்பட்டு வருபவர் மித்திரன் என்று அழைக்கப்படும் திரு. யூசி என்பவரே.

ஆகவே தமிழ் நாட்டில் இருந்து தன்னிச்சையாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த கந்தாவின் எந்த ஒரு செயற்பாட்டிற்கும்எமது இயக்கத்துக்கும் எந்த வித தொடர்பும் இல்லை. என்பதை நாம் மக்களுக்குத் தெளிவுபடுத்துகின்றோம்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)


## விற்பனை

நீலம், பச்சை, கறுப்பு ஆகிய நிறங்களிலும், எல்லா அளவுகளிலும் போட்டோ ஸ்ரட் பிரதிகள் செய்யக்கூடிய ''கனன்'' போட்டோ ஸ்ரட் மெசின் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 239, கிளின் கட்,
யாழ்ப்பாணம்.

(சி 5o29)

# NEW MASTER INSTITUTE
B. M. C. LANE, JAFFNA.

## 90 A/L
### WEEKEND CLASSES

## கலை, வர்த்தகம்

| | | |
|---|---|---|
| சின்னத்தம்பி | — பொருளியல் | - 8 a.m. |
| சந்திரராஜா | — அளவையியல் | - 9 a.m. |
| யோகராஜா | — கணக்கியல் | - 10 a. m. |
| தேவா | — வர்த்தகம் | - 11 a.m. |
| நாகேஸ்வரன் | தமிழ் | - 10 a. m. |
| | இந்துநாகரிகம் | -11 a.m. |
| கேசவன் | — அளவையியல் | - 12 noon |

ஆரம்பம்:

**10-07-88 Sunday**

(C 5654)


## மரண அறிவித்தல்கள்

### திரு. இ. இரத்தினராஜா

அல்வாய் தெற்கு பாரதி பவனம் திரு. இ. இரத்தினராஜா B.Sc., Dip in Edu. (உடு. அ. மி. கல்லூரி ஆசிரியர்) 3-7-88 ஞாயிறு காலை 7-30 மணிக்கு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற த. இரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் கவிஞர் மு. செல்லையா அதிபர் ஆ. கதிரவேல் ஆகியோரின் மருமகனும் திரு. கந்தவனம் P.H.I. அவர்களின் அன்புச் சகோதரனும் திருமதி. பாரதி அவர்களின் அன்புக் கணவரும் செல்விகள் சுதர்சனா, சங்கீத்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், கா. பாக்கியராசா, மு. செ. விவேகானந்தன், மு. செ. சபாலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் திரு. த. இராசலிங்கம் (மு.பா.உ.) அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரனும் பா. வெற்றிவேல் பா. மணிவண்ணன், க. சுரேஸ் ஆகியோரின் சிறிய தகப்பனுமாவார்.

இறுதிக் கிரியைகள் 4-7-88 திங்கள் காலை 10 மணிக்கு அல்வாய் தெற்கு பங்கு வேம்படி மயானத்தில் நடைபெறும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **மு. செ. விவேகானந்தன்**

(5777)

### தில்லையம்பலம் தேவதாசன்

''டாக்டர்'' என்று எல்லோரினாலும் அன்புடன் அழைக்கப்பட்ட திரு. தில்லையம்பலம் தேவதாசன் (பிறப்பிடம் அராலி-வதிவிடம் நெடுங்குளம் வீதி அரியாலை, இளைப்பாறிய தபால்நடை இலாகா உத்தியோகத்தர்) சனிக்கிழமை லண்டனில் காலமானார். இவர் சிவானுகூலம் (Retd. Staff Nurse Chest Clinic, Pannai) அவர்களின் அன்புக் கணவரும், சிவதாசன், உமாதாசன், மதிதாசன், சிறிதரதாசன், லம்போதரதாசன் (யாவரினதும் விலாசம் No. 2, Cecil Road, Harleden N. W. 10, London) ஆகியோரது அன்புத் தந்தையும் ஆவார். ஈமக்கிரியைகள் வருகிற புதன்கிழமை 6-7-88 லண்டனில் நடைபெறும்.

உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **S. சுப்பிரமணியம்**

((5778) (லிங்கம்ஸ் சில்க்கவுஸ்)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது, Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Monday 04 th July 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org